1963ம் ஆண்டிலிருந்தவற்றைவிட 1964ம் ஆண்டில், விவசாயத் தொழிலாளர்களின் கூலி வீதங்கள் 2·4 சதவீதத்தாலும், கைத்தொழில் வர்த்தகத் தொழிலாளர்களின் கூலி வீதங்கள், 1·5 சதவீதத்தாலும் உயர்ந்து இருந்தன. இக்கூலி வீதங்களின் உயர்ச்சி, வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டி உயர்ந்ததைத் தொடர்ந்து அவர்களது துணைச் சம்பளங்கள் அதிகரித்ததனுல் மட்டுமே உண்டாகியது. எனினும் இவ்வதிகரித்த துணைச் சம்பளங்கள், வாழ்க்கைச் செலவுகளின் உயர்ச்சி முழுவதையும் ஈடு செய்வனவாக அமையவில்லை.

## (ஈ) வேலை நிலையும் தொழில் உறவுகளும்

வேலை நிலை:

வருடாந்த மொத்தத் தரவுகள் இல்லாதமையினுல், நாட்டிலுள்ள வேலையின்மையின் வருடாந்த நடமாட்டங்களை ஓரளவில் அறிவதற்கு, தொழில் இணைப்புக் காரியாலயங்களிற் பதிவுபட்டோரின் எண்ணிக்கை பற்றிய தரவுகள், உதவுகின்றன. 1963ம் ஆண்டு முடிவின்போது, தொழில் இணைப்புக் காரியாலயங்களிற் பதிவுபட்டோரின் எண்ணிக்கை, கடந்த வருட முடிவிலிருந்ததிலும் பார்க்க 0·2 சதவீதம் குறைவாக இருந்தது. 1964ம் ஆண்டின் மூன்றும், நான்காம் காற்பகுதிகளின் போது இவ்வெண்ணிக்கைகள் நிதானமாக அதிகரித்தன. எனவே இப்பதிவுபட்டோரின் எண்ணிக்கையானது, 1963ம் ஆண்டு மார்கழி மாத முடிவிற்குரிய எண்ணிக்கையாகிய 151,922 உடன் ஒப்பிடுகையில், 1964ம் ஆண்டு மார்கழி மாத முடிவின்போது 165, 456 ஆக இருந்தது. நடைமுறை வருடத்தின்போது, தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோர், இலிகிதர் ஆகிய பதிவாளர்களின் எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டதனுல் 1964ம் ஆண்டு முடிவின்போது, இப்பதிவாளர்களின் எண்ணிக்கை, 1963ம் ஆண்டு மார்கழி மாத முடிவிலிருந்ததிலும் பார்க்க 14·7 சதவீதம் கூடியதாக இருந்தது. தேர்ச்சி பெற்றோர், அரைத்தேர்ச்சி பெற்றோர், தேர்ச்சி பெருதோர் ஆகிய பதிவாளர்களின் எண்ணிக்கைகள், 1963ம் ஆண்டு மார்கழி மாத முடிவிலிருந்தவற்றைவிட முறையே, 8·2 சதவீதத்தாலும், 5·3 சதவீதத்தாலும், 7·9 சதவீதத்தாலும் அதிகரித்தன. அரசாங்கத் துறை, ஓரளவு அரசாங்க ஆதிக்கமுள்ள கூட்டுத்தாபனங்கள், தனிப்பட்டோர் துறை ஆகியவற்றில் 1964ம் ஆண்டு உண்டாக்கப்பட்ட வேலைகள் சம்பந்தமான முழுத் தரவுகளும் கிடைக்கவில்லை.

கடந்த சில ஆண்டுகளில் வேலைக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையையும், ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள பதிவாளர்களின் மொத்த எண்ணிக்கையில் வேலையில் அமர்த்தப்பட்டோரின் சதவீதத்தையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II ஈ—1

### தொகுதிப்படி வேலையில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும், பதிவு செய்தோரின் மொத்த எண்ணிக்கையில், இவர்களின் சதவீதமும்

| வருடம் | தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோரும் இலிகிதரும் | % | தேர்ச்சி பெற்றோர் | % | அரைத் தேர்ச்சி பெற்றோர் | % | தேர்ச்சி பெருதோர் | % | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1955 | 2,166 | 14·9 | 1,064 | 12·5 | 1,187 | 5·9 | 3,791 | 13·6 | 8,208 | 11·6 |
| 1956 | 1,913 | 11·9 | 845 | 8·6 | 1,565 | 6·1 | 4,162 | 12·1 | 8,485 | 9·9 |
| 1957 | 1,176 | 6·3 | 709 | 5·3 | 1,180 | 3·8 | 3,053 | 6·4 | 6,118 | 5·5 |
| 1958 | 1,827 | 9·2 | 800 | 5·9 | 1·006 | 3·1 | 2,251 | 4·4 | 5,884 | 5·0 |
| 1959 | 1,667 | 8·0 | 1,045 | 7·5 | 1,275 | 3·8 | 3,218 | 5·4 | 7,205 | 5·6 |
| 1960 | 1,400 | 5·3 | 771 | 4·6 | 1,247 | 3·6 | 4,744 | 6·5 | 8,162 | 5·4 |
| 1961 | 1,259 | 4·6 | 631 | 3·5 | 964 | 2·8 | 2,794 | 3·9 | 5,648 | 3·7 |
| 1962 | 1,263 | 3·7 | 468 | 2·7 | 809 | 2·3 | 2,315 | 3·5 | 4,857 | 3·2 |
| 1963 | 1,322 | 3·7 | 502 | 3·0 | 839 | 2·3 | 2,466 | 3·9 | 5,129 | 3·4 |
| 1964* | 1,722 | 4·2 | 535 | 3·0 | 945 | 2·5 | 3,599 | 5·3 | 6,801 | 4·1 |

மூலம்: தொழிற் திணைக்களம்

* தற்காலிகமானவை.

வேலையில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை, கடந்த வருடங்களில் இருந்த வற்றைவிட 1964ம் ஆண்டின்போது ஓரளவு அதிகரித்திருந்தது. வேலையிலமர்த்தப் பட்டோரில் மிகக் கூடிய தொகையானோர், தேர்ச்சி பெறுதோரின் தொகுதியைச் சேர்ந்தவர்களாகும். பதிவு செய்தோரின் மொத்த எண்ணிக்கையில் வேலையில் அமர்த்தப்பட்டோரின் சதவீதம், இத்தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கே மிகக் கூடியதாக, அதாவது 5·3 சதவீதமாக, விளங்கியது. பதிவு செய்தோர்களின் எண்ணிக்கையில் வேலையிலமர்த்தப்பட்டோரின் சதவீதம், தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோர், இலிகிதர் சம்பந்தப்பட்ட வரையில், அநேகமாக இரண்டாவதாக இருந்தது. இச்சதவீதங்கள், சகல தொழிலாளர் தொகுதிகளிடையேயும், பொதுவாக சென்ற வருடத்திலிருந்தவற்றிற்குச் சமமாகவோ அல்லது உயர்வாகவோ இருந்தன.

**தொழில் உறவுகள்:**

வேலை நிறுத்தங்கள் பற்றிய விபரங்கள், தொழில்–முகாமை உறவுகளில் நிலவும் சூழ்நிலை மாற்றங்களை அறிவதற்கு ஒருமட்டில் அளவு கோலாகப் பயன்படுகின்றன. கீழ்காணும் அட்டவணை, வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை, அவற்றில் ஈடுபட்ட தொழிலாளரது எண்ணிக்கை, அதன் பயனாக இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள் முதலியவற்றைக் காட்டுகின்றது.

அட்டவணை II ஈ—2

## வேலை நிறுத்தங்கள்

| வருடம் | பெருந் தோட்டங்கள் | | | ஏனைய தொழில்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்கள் | இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்கள் | எண்ணிக்கை | ஈடுபட்ட தொழிலாளர்கள் | இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள் |
| 1955 | 160 | 1,143 | 69,913 | 47 | 11,293 | 36,016 |
| 1956 | 99 | 56,908 | 2,00,888 | 115 | 31,852 | 1,52,966 |
| 1957 | 177 | 2,97,061 | 6,18,050 | 127 | 70,239 | 1,90,443 |
| 1958 | 123 | 39,372 | 3,40,632 | 96 | 42,713 | 3,99,228 |
| 1959 | 177 | 47,318 | 3,52,095 | 71 | 42,453 | 4,60,141 |
| 1960 | 123 | 42,528 | 2,59,948 | 37 | 4,839 | 15,139½ |
| 1961 | 90 | 29,223 | 3,17,866 | 39 | 38,013 | 1,70,372 |
| 1962 | 138 | 42,569 | 1,93,792 | 50 | 25,730 | 8,01,882 |
| 1963 | 174 | 62,511 | 3,59,905 | 58 | 29,819 | 4,79,678 |
| 1964* | 178 | 61,529 | 5,54,953 | 82 | 16,887 | 2,13,514 |

மூலம்: தொழிற் திணைக்களம்

*தற்காலிகமானவை,

1964ம் ஆண்டில் பெருந் தோட்டப் பகுதிகளில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை, 1963ம் ஆண்டிலிருந்ததைவிட சிறிதளவே அதிகரித்திருக்கையில் ஏனைய தொழில்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்திருந்தது. தொழிற்சங்கங்களுடைய தொழிலாளர்களின் தொகையிற் பெரும்பகுதியானோர் வேலை செய்யும் பெருந் தோட்டப் பகுதியே, ஆகக் கூடிய வேலை நிறுத்தங்களைத் தொடர்ந்தும் பதிவு செய்தது. பெருந் தோட்டங்களிலும் ஏனைய தொழில்களிலும் நடைபெற்ற வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை 1963ம் ஆண்டிலிருந்த எண்ணிக்கைகளாகிய 174 உடனும் 58 உடனும் ஒப்பிடுகையில், 1964ம் ஆண்டில், முறையே, 178 ஆகவும் 82 ஆகவும் இருந்தது. தோட்டத் துறையில் இவ்வருடம் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவுற்றிருந்த போதிலும், இழக்கப்பட்ட ஆள்வேலை நாட்கள், சென்ற ஆண்டிலிருந்தவற்றைவிடக் கூடியனவாக இருந்தன. ஏனைய தொழில்களில், வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும், இழக்கப்பட்ட ஆள் வேலை நாட்களும் குறைவாக விளங்கின.

தோட்டத்துறையில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், 1963ம் ஆண்டிற்குரிய சராசரியாகிய 5·8 நாட்களுடன் ஒப்பிடுகையில், 1964ம் ஆண்டில் சராசரியாக 9·0 நாட்களுக்கு நீடித்தன. ஏனைய தொழில்களில் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள்,

பொதுவாகத் தோட்டப் பகுதிகளிலுள்ளவற்றைவிட நீண்ட காலத்திற்கு நீடித்த வையாகும். எனினும், இவ்வேலை நிறுத்தங்களின் நீடிப்பு, 1963ம் ஆண்டிற்குரிய சராசரியாகிய 16·1 நாட்களிலிருந்து, 1964ம் ஆண்டு, சராசரியாக 12·6 நாட்களுக் குக் குறைந்தது.

தொழிற் திணைக்களம் செய்த செய்த பாகுபாட்டின்படி வேலைநிறுத்தங்களுக் காகக் கொடுக்கப்பட்ட அடிப்படைக் காரணங்களை நோக்குமிடத்து, மொத்த வேலை நிறுத்தங்களில் வேலை நீக்கம் அல்லது வேலை இழப்பு 29·6 சதவீதமானவைக் கும், தோட்டவிதிகள், ஒழுக்கக் கட்டுப்பாடு, வேலை ஒழுங்குகள் முதலியவை 26·9 சதவீதமானவைக்கும், கூ கொடாமை, கூலி கொடுப்பதிற் சுணக்கம் போன்ற கூலித்தகராறுகள் 11·9 சதவீதமானவைக்கும் காரணங்களாக விளங்கின. இக் காரணங்களைப்பற்றிய வேலைநிறுத்தங்கள் பெரும்பாலும் தோட்டங்களில் ஏற்பட்ட வையாகும். பொதுவான கோரிக்கைகள், மொத்த வேலைநிறுத்தங்களில் 9·6 சதவீதமானவற்றுக்கு வகை கூறின. கூலி உயர்வுகள் பற்றிய கோரிக்கைகள் காரணமாக எழுந்த வேலைநிறுத்தங்கள் ஒப்பியல்பிற் குறைவாக விளங்கின. இவை பெரும்பாலும் தோட்டமல்லாத ஏனைய துறைகளில் நடைபெற்று, மொத்த வேலை நிறுத் தங்களில் ஆக 2·3 சதவீதமானவற்றுக்கே வகை கூறின.

### (உ) நாணயத்தினதும் வங்கித் தொழிலினதும் போக்குகள்

நாணய விரிவானது 1963ம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 1964ம் ஆண்டில் அளவு குறைந்திருப்பினும் கணிசமாய் அமைந்திருந்தது. வர்த்தக வங்கிகள் தனியார் துறையோடு[1] கொண்ட தொடர்பினுல் அவை உருவாக்கிய கொடுகடனின் அதிகரிப்பு ரூபாய் 920 இலட்சத்தால் அதிகரித்தது. ஆனுல் 1963ல் இத்தொகை ரூபாய் 1369 இலட்சத்தால் அதிகரித்திருந்தது. அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்ட வர்த்தக வங்கியினதும் மத்திய வங்கியினதும் கடன் கொடு தொகை 1963ன் ரூபாய் 1669 இலட்ச அதிகரிப்போடு 1964ல் அது ரூபாய் 1046 இலட்சத்தால் அதிகரித்தது. வங்கித் தொழில் முறையின் கைவசமிருந்த வெளி நாட்டுச் சொத்து ரூபாய் 364இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. 1963ல் வீழ்ச்சி ரூபாய் 532 இலட்சமாக விளங்கியது. மொத்தமாகப் பார்க்கும்போது, தனியார் துறைகளுக்கும் அரசாங்கத்திற்குமான வங்கிக் கொடுகடனின் அதிகரிப்பில் இருந்து வெளி நாட்டு சொத்துக்களின் வீழ்ச்சியைக் கழிப்பின், 1963ல் ரூபாய் 2506 இலட்சமாக விளங்கிய தொகை, 1964ல் ரூபாய் 1602 இலட்சமாக அமைந்திருந்தது புலப்படும்.

### திரவத்தன்மையின் வளர்ச்சி

வங்கிகள் அல்லாத தனியார் துறையின் திரவச் சொத்தின் தொகை 1964ல் ரூபாய் 2666 இலட்சத்தால் அல்லது 9·0 சதவீதத்தால் அதிகரித்தது. இது 1963ல் ரூபாய் 2980 இலட்சத்தால் அல்லது 11·2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனினும் 1964ம் ஆண்டிற்கான ஆய்விற் கொடுக்கப்பட்ட வருடத்தில் முதன்மைத் திரவத்தன்மையின்[2] வளர்ச்சி ரூபாய் 1158 இலட்சமாக விளக்கியது. இது 1963ல் ரூபாய் 1633 இலட்சத்தால் அதிகரித்திருந்தது. 1964ல் இரண்டாம் தரத் திரவத் தன்மையின் [3]அதிகரிப்பு 1963லும் பார்க்க கூடியிருந்தது. இரண்டாந் திரவத்தன்மை 1964ல் ரூபாய் 1508 இலட்சத்தாற் கூடியிருக்க 1963ல் ரூபாய் 1347 இலட்சத்தாற் கூடியிருந்தது.

முதன்மை, இரண்டாம் தரத் திரவச் சொத்துக்கள் என இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்ட வங்கிகள் அல்லாத தனியார் துறையின் திரவச் சொத்துக்களின் விபரங்களை அட்டவணை II (உ) 1 எடுத்துக் காட்டுகின்றது.

வங்கிகள் அல்லாத தனியார் துறையின் கைவசம் இருந்த திரவச் சொத்துக்களின் மொத்த அளவு ரூபாய் 2666 இலட்சத்தால் அல்லது 9·0 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பிட்டு நோக்குகையில் 1963ம் ஆண்டில் இதனின் அதிகரிப்பு ரூபாய் 2980 இலட்சமாக அல்லது 11·2 சதவீதமாய் அமைந்திருந்தது. மொத்த தேசிய

---

1. இங்கு தனியார் துறை என்பது அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உள்ளூர் ஆட்சி மன்றங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், மற்றும் மருவிய அரசாங்க அல்லது அரசாங்கத்தினுல் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் முகவர்கள்—உண்மையில் மத்திய அரசாங்கம், வர்த்தக வங்கிகள், மத்திய வங்கி ஆகியவை தவிர்ந்த ஏனையவை யாவும் அடங்கும்.
2. பொதுமக்கள் கைவசமுள்ள நாணயமும் கேள்வி வைப்புக்களும் (பணநிரம்பல்).
3. பொதுமக்கள் கைவசமுள்ள தவணையும், சேமிப்பு வைப்புக்களும், அரசாங்கப் பிணைகள், வரி ஒதுக்கு நிதி, சேமிப்பு சான்றிதழ்கள், வெளிநாட்டு நிலுவைகள் ஆகியன.